# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2024 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 04 ஆம் நாள், புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் ஆவணி மாதம் 19-ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.05/2024 இன் அ.வ.எண். 152/2012

மகாலிங்கம் …மனுதாரர்/வாதி

/எதிர்/

1)ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்,
வடலிவிளை, அதன் ஆட்சிக்குழு தலைவர்
S.முத்துகிருஷ்ணன் மூலம்

2) வட்டாட்சியர்,
இராதாபுரம்.

3) மாநில தேசிய நெடுஞ்சாலைத்துறை,
தமிழ்நாடு அரசு
வள்ளியூர் கோட்டம்,
வள்ளியூர் அதன் பொறியாளர் மூலம்.

4) தமிழ்நாடு அரசு அதன்
மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி மூலம். … எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 27.08.2024 ம் தேதியன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.வீரமோகனராய் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.S.ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:27:54 +0530

எதிருரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் 07.08.2024 ல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசாங்க வாதுரைஞர் திரு.V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151 -ன் கீழ் வழக்கறிஞர்/ஆணையர் நியமனம் செய்து இம்மனுவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் வருவாய்த்துறை ஆவணங்கள் வழியும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் வழியும் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

வழக்கு 1ம் தபசில் சொத்தானது மனுதாரரின் தந்தை தர்மர் நாடாருக்கு 17.09.1981 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் வழி பாத்தியப்பட்டது ஆகும். 1ம் தபசில் சொத்தையும் வேறு சொத்துக்களையும் அனுபவம்செய்து வந்து 08.12.1997 ல் மனுதாரர் பெயருக்கு ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார். மேற்படி உயில் ஆவணம் வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.52/1997 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தர்மர் நாடார் 30.11.2002 அன்று காலமாகிவிட்டார். மனுதாரரின் தந்தை காலம்சென்ற பின்பு மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து வழக்கு 1ம் தபசில் சொத்தை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:28:02 +0530

மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார். மேலும், வழக்கு 1ம் தபசில் சொத்திலுள்ள கடையில் மனுதாரர் சொந்தமாக ஹோட்டல் வியாபாரம் செய்து வருகிறார்.

வழக்கு 1ம் தபசில் சொத்தை ஒட்டி வடக்கே 2ம் தபசில் சொத்தான அரசு ரோடு புறம்போக்கு உள்ளது. வழக்கு 2ம் தபசில் சொத்து மாநில தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ரோடு புறம்போக்கு ஆகும். அந்த நிலமானது போக்குவரத்து பாதையாகும். எனவே, மனுதாரருக்கு அரசு ரோடு புறம்போக்கை பாதையாக அனுபவம் செய்ய உரிமை உள்ளது.

வழக்கு தபசில் சொத்துக்களுக்கு மேற்கு பக்கம் பிரதிவாதி கோவில் உள்ளது. கடந்த 10.04.2012 அன்று பிரதிவாதி கோவில் நிர்வாகமும், அவர்களை சார்ந்தவர்களும் சேர்ந்து வழக்கு 2ம் தபசில் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்யும் விதத்தில் 2ம் தபசில் சொத்தில் மண்டபம் கட்ட முயற்சித்தனர். எனவே, மனுதாரரால் இது குறித்து பணகுடி காவல் ஆய்வாளரிடம் புகார் மனு கொடுக்கப்பட்டது. ஆனால், உரிமையியல் சம்மந்தப்பட்டது என்பதால் புகாரின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினர்.

வழக்கு 2ம் தபசில் சொத்து தமிழக அரசு மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு பாத்தியப்பட்டது என்பதால் 2 முதல் 4 பிரதிவாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். மனுதாரர் அசல் வழக்கில் 2ம் தபசில் சொத்தாக கூறியுள்ளது அரசு ரோடு புறம்போக்கு ஆகும். அதாவது 2ம்தபசில் சொத்தான அரசு ரோடு புறம்போக்கானது தமிழ்நாடு அரசுக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த 2ம் தபசில் சொத்தான அரசு ரோடு புறம்போக்கு வழியாகத்தான் மனுதாரருடைய 1ம் தபசில் சொத்திற்கு சென்று வருகிறார். 2ம் தபசில் அரசு புறம்போக்கு ரோட்டை 1ம் பிரதிவாதி கோவில் நிர்வாகம் ஆக்கிரமித்து கட்டுமானம் செய்ய முயற்சித்ததால் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:28:12 +0530

அசல் வழக்கின் தவாவானது 2ம் தபசில் சொத்து மாநில நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பிலுள்ள அரசு புறம்போக்கு சாலையா, இல்லையா என்பதேயாகும். அதுபோல் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 2ம் தபசில் சொத்தின் புல எண்ணையும், விஸ்தீரணத்தையும் மறுத்துள்ளார்கள். ஆகவே, 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து அடையாளம் காண்பது அசல் வழக்கிற்கு மிகவும் அவசியமாகும். எனவே, தபசில் சொத்துக்களை தாலுகா சர்வேயர் உதவியுடன் வழக்கறிஞர்/ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு, அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்தால் மட்டுமே இவ்வழக்கின் உண்மைநிலையை கண்டறிய இயலும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. <u>2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கவுண்டர் மெமோவின் சுருக்கம்</u>:

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கானது வாதியின் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2012ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கிற்கு 12 வருடங்கள் கழித்து தற்பொழுது ஆணையர் நியமணம் செய்ய மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவை அனுமதிப்பதால் தேவையற்ற காலதாமதம் ஏற்படும். எனவே, மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கில் 2ம்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:28:21 +0530

தபசில் சொத்தாக கூறியுள்ளது அரசு ரோடு புறம்போக்கு ஆகும். அதாவது 2ம்தபசில் சொத்தான அரசு ரோடு புறம்போக்கானது தமிழ்நாடு அரசுக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த 2ம் தபசில் சொத்தான அரசு ரோடு புறம்போக்கு வழியாகத்தான் மனுதாரருடைய 1ம் தபசில் சொத்திற்கு சென்று வருகிறார். வழக்கு 2ம் தபசில் சொத்து மாநில தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ரோடு புறம்போக்கு ஆகும். அந்த நிலமானது போக்குவரத்து பாதையாகும். எனவே, மனுதாரருக்கு அரசு ரோடு புறம்போக்கை பாதையாக அனுபவம் செய்ய உரிமை உள்ளது. 2ம் தபசில் அரசு புறம்போக்கு ரோட்டை 1ம் பிரதிவாதி கோவில் நிர்வாகம் ஆக்கிரமித்து கட்டுமானம் செய்ய முயற்சித்தார். வழக்கு ஆகவே, 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து அடையாளம் காண்பது அசல் வழக்கிற்கு மிகவும் அவசியமாகும் என கூறியுள்ளார்.

2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில், 2012ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கிற்கு 12 வருடங்கள் கழித்து தற்பொழுது ஆணையர் நியமணம் செய்ய மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவை அனுமதிப்பதால் தேவையற்ற காலதாமதம் ஏற்படும் என கூறியுள்ளார்.

அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் அனுபவத்தை உறுதி செய்வதற்காகவும் சாட்சியங்களை சேகரிப்பு செய்யப்படுவதற்காகவும் வேண்டி இம்மனு அனுமதிக்கப்படவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை வழக்கை விசாரணை செய்வதற்கு மிக அவசியம் என்பதால் மட்டும் அனுமதிக்கப்படதக்கது ஆகும்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:28:28 +0530

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. திரு.M.Emmanuvel B.A., B.L., அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற ஆணையர் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் சார்பு செய்து தபசில் சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணையாளரின் செலவுத் தொகையாக ரூ.7,500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி செலவுத் தொகையை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையாளருக்கு கொடுக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 04.10.2024.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் வருடம் செப்டம்பர் மாதம் 04-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:28:36 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.04 16:28:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

கூ.மா.உ.நீதிமன்றம், வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.05/2024 இன்

அ.வ.எண்.152/2012

தேதி.04.09.2024